திடலில் பாதுகாப்புத் துறை உத்தேசித்துள்ளபடி கட்டிடங்கள் கட்டும் பணி தொடர்ந்து நிறைவேற்றப்படாமல் இந்திய அரசு இரு வாரங்களுக்கு நிறுத்தி வைக்க வேண்டுமென்று இடைக்காலத் தடை ஆணை ஒன்றை உயர்நீதி மன்றம் பிறப்பித்தது. இது தற்போது நீதி மன்ற விசாரணையிலுள்ளது.

(4) அரசினர் தீர்மானங்கள்.

(அ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டப் பேரவையின் 164-வது விதியின்கீழ் 1972-73-ஆம் ஆண்டுக்குரிய மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

(5) அறிவிப்புகள்.

(அ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்குப் பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், மதிப்பீட்டுக் குழுவிற்கு Estimate Committee பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 22-3-1972, புதன்கிழமை, முற்பகல் 11-00 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 23—3—1972, வியாழக்கிழமை, முற்பகல் 11.00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 24-3-1972, வெள்ளிக்கிழமை முற்பகல் 11-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது, பதினாறுக்கு மேற்படுமாயின் 27—3—1972, திங்கட்கிழமை முற்பகல் 9-00 மணிக்கும் பிற்பகல் 1-00 மணிக்கும் இடையே உறுப்பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.